**CC. No.** 134/2019 **Date : 10.08.2026**

**PW1 – சக்கரைமுத்து**

எதிரி ஆஜர்.

எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 311 இன் கீழான மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

10.10.2017 ஆம் தேதியன்று காசோலை எண் 64705 என்பதை எதிரியின் வங்கியில் செலுத்தி எதிரியின் வங்கி கணக்கிலிருந்து ரூ.1 லட்சம் தொகையினை நான் எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் வங்கி கணக்கிற்கான பரிவர்த்தனை ஆவணத்தில் மேற்படி ரூ.1 லட்சம் தொகைக்கான பரிவர்த்தனை என் மூலம் மேற்கொள்ளப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அதனை வழக்கிற்காக மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எதிரியும் பரமசிவம் என்பவரிடம் ஒரே சமயத்தில் வேலை பார்த்தோம் என்றால் சரிதான். அவ்வாறான நிலையில் எதிரிக்கு ரூ.3 லட்சம் கடனாக கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல.